06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

ZOOM ONLINE CLASS

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 09

முதலாம் தவணை

### அலகு 05 – மருமகனுக்கு விருந்து



தமிழ் ஆசான்

"அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

# மருமகனுக்கு விருந்து

## பகுதி – 1

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. மருமகன் மாமனார் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார். மாமனார் என்பதன் எதிர்ப்பால் சொல்,
   1. மருகனார்
   2. தகப்பனார்
   3. மாமியார்
   4. மச்சான்

2. பெண்பிள்ளைகளைக் கட்டிக் கொடுத்தே அக்குடும்பம் நொடிந்துவிட்டது. நொடிந்து விட்டது என்றால்,
   1. சிறுத்துவிட்டது
   2. பெருகிவிட்டது
   3. நலிந்துவிட்டது
   4. நகர்ந்துவிட்டது

3. "எனக்கு காணிக்கை தந்தால் குணமாக்கி விடுவேன்" என்றான். இங்கு காணிக்கை என்பதன் பொருள்,
   1. நிலம்
   2. காணித்துண்டு
   3. கடவுளுக்கு அல்லது பெரியோருக்கு விரும்பி அளித்திடும் பொருள்
   4. நிலத்தின் சிறுபகுதி

4. குறிகாரன் கொடுத்த மருந்தால் மகனுக்கு உடல் நல்லபடி தேறிவிட்டது. குறிகாரன் என்றால்,
   1. குறி சொல்பவன்
   2. அடையாளம்
   3. எதிர்காலத்தைப் பற்றிக் கணித்து கூறுபவன்.
   4. குறளி

5. மருமகனுக்குப் பதற்றம் தொற்றிவிட்டது. பதற்றம் என்றால்.
   1. பதட்டம்
   2. செயல்படுவதில் நிதானம் இழந்து காட்டப்படும் பரபரப்பு.
   3. பீதி
   4. நிதானமின்மை

**2. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல் உணர்த்தும் பொருளைத் தெரிவு செய்து கோடிடுக.**

6. **கோட்பாடு** இல்லாத மனிதன் முன்னேறுவது கடினம். இதில் கோட்பாடு என்பதன் ஒத்த கருத்து.
   1. செல்வம்
   2. அறிவு
   3. கொள்கை
   4. ஒழுக்கம்

Agaram Dhines

7. **ஊதிய** உயர்வு கோரித் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஊதியம் என்பதன் ஒத்த கருத்து,

1. விடுமுறை
2. வேதனம்
3. அந்தஸ்து
4. ஓய்வு நேரம்

8. **மதம்** கொண்ட யானை பாகனைத் தூக்கி வீசியது. இதில் மதம் என்பது,

1. சமயம்
2. கோபம்
3. கொள்கை
4. வெறி

9. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் **வாக்கினிலே** ஒளி உண்டாகும். இதில் வாக்கு என்பது,

1. உறுதிமொழி
2. சொல்
3. வாக்குச்சீட்டு
4. அசரீரி ஒலி

10. “தண்டித்துவிட்டேன், தவறுக்காய் மிக நொந்தேன்”. இதில் நொந்தேன் என்பதன் பொருள்,

1. நொசிதல்
2. நொய்தல்
3. வருந்தினேன்
4. நொந்துதல்

Agaram Dhines

### 3. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புக.

11. ஏழாம் வேற்றுமையைக் வேற்றுமை ………………………. என்றும் அழைப்பர்.

12. ஏழாம் வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ……………………………… என்னும் பெயர்களுள் ஒன்றைத் தனக்கு இடமாகக் கொண்டுவரும்.

13. எட்டாம் வேற்றுமை பொருளில் ……………………………… வரும்.

14. தன்மைப்பெயர்களும் முன்னிலைப்பெயர்களும் …………………………… ஏற்கமாட்டா.

15. வாக்கியங்களில் செயப்படுபொருளை ஏற்காத வினைகளைச் செயற்படு பொருள் …………… என்பர்.

| | | | | |
|---|---|---|---|---|
| குன்றியவினைகள் | கண் | விளியுருபை | அறுவகை | விளி |

### 4. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் அடையாளமிடுக.

16. செயப்படுபொருளை ஏற்றுவரும் வினைகளை செயப்படுபொருள் குன்றாவினை என்பர்.( )
17. செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் குன்றாத வினைகளாகவும் வரும் வினைகளைப் பொதுவினை என்பர். ( )
18. கருத்தா தானே செய்யும் வினை பிறவினையாகும். ( )
19. செயப்படுபொருள் எழுவாயாய் அது செய்யும் தொழிலைக் குறிக்கும் வினை செயப்பாட்டு வினையாகும். ( )
20. ஒரு தொழில் நிகழ்வதை அறிவிப்பது உடன்பாட்டுவினை, தொழில் நிகழாமையையும் தொழிலை மறுப்பதையும் உணர்த்தும் வினை ‘எதிர்மறை’ வினையாகும். ( )

**5. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

21. பாட்டு, செய்யுள், புலவர் என்னும் பலபொருளுடைய ஒரு சொல்,
    1. இசை
    2. கவி
    3. கவிதை
    4. நூல்

22. வடிவம், நிறம், அழகு, குணம் என்னும் பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்,
    1. வர்ணம்
    2. வருணம்
    3. வண்ணம்
    4. பாட்டு

23. பக்கம், செல்வம், இடம், பொன் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    1. மாடு
    2. பணம்
    3. சிறப்பு
    4. அழகு

24. பாத்திரம், மரக்கலம், ஆபரணம் என்னும் பலபொருள் உணர்த்தும் சொல்
    1. தலம்
    2. கலம்
    3. நிலம்
    4. களம்

25. இசை, ஒலி,வேதம், மந்திரம், சுதி, புகழ் என்னும் பலபொருள் தரும் ஒரு சொல்,
    1. பாட்டு
    2. ஓசை
    3. சுருதி
    4. மறை

**6. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் மறைந்து வந்த வாக்கியம்,
    1. கமலன் பந்தை ஓடி அடித்தான்.
    2. காலையும் மாலையும் கடவுளை வணங்கு
    3. சிறுவர்கள் கலை நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரும்புகிறார்கள்.
    4. முகில்வண்ணன் கற்றான்.

27. கிட்டாதாயின் வெட்டென மற. இதில் இடம்பெற்ற தோன்றா எழுவாய்.
    1. கிட்டாதாயின்
    2. நீ
    3. வெட்டென
    4. மற

28. பின்வருவனவற்றுள் வினையடை கொண்ட வாக்கியம்,
    1. கண்ணன் மல்லிகை மலர் பறித்தான்.
    2. வெள்ளை முயல் துள்ளிப் பாய்ந்தது.
    3. ஓதுவது ஒழியேல்
    4. தம்பிக்குப் பரிசு கிடைத்தது.

29. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்,
    1. திரையரங்கில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.
    2. வெள்ளைப் பூனை பாற்குடத்தை மெல்ல மெல்ல உருட்டி உடைத்தது.
    3. மாணவர்கள் பாடம் படித்தனர்
    4. மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்த்தல் வேண்டும்.

30. பக்திச்சுவை ததும்பும் பெரியபுராணம் சேக்கிழார் அளித்த பெருஞ்செல்வமாகும். இவ்வாக்கியத்தின் எழுவாய் அடைமொழி,
    1. பெரியபுராணம்
    2. பொக்கிசம்
    3. சேக்கிழார்
    4. பக்திச்சுவை ததும்பும்

Agaram Dhines

1. **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

31. பெயர்ச்சொற்றொடர் செயப்படுபொருள் தந்த வாக்கியம்,
    1. விமலா அரிய நூல்களை வாங்கினாள்.
    2. நல்லை நகர் ஆறுமுகநாவலரை அறியாதார் யாருமில்லை.
    3. வானளாவி வளர்ந்த தென்னை முறிந்து விழுந்தது.
    4. பாரதிதாசன் பாடல்கள் உணர்ச்சிமிக்கவை.

32. கருமேகம் சூழ்ந்த வானம் மழையை அள்ளிப் பொழிந்தது. இவ்வாக்கியத்தின் எழுவாய் அடைமொழி,
    1. அள்ளி
    2. வானம்
    3. கருமேகம் சூழ்ந்த
    4. பொழிந்தது

33. மல்லிகா அழகான ஓவியங்களை வரைந்தாள். இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள் அடைமொழி,
    1. வரைந்தாள்
    2. ஓவியங்களை
    3. அழகான
    4. மல்லிகா

34. விண்வெளிமனிதன் செவ்வாய்க்கிரகத்தை வேகமாக வலம் வந்தான். இவ்வாக்கியத்தின் பயனிலை அடைமொழி,
    1. விண்வெளி
    2. வேகமாக
    3. வந்தான்
    4. வலம்

35. பாரத பூமியிலே எட்டயபுரத்திலே பாழும் வறுமையின் மடியிலே பாரதி பிறந்தார். இவ்வாக்கியத்தின் பயனிலை அடைமொழி,
    1. பாழும் வறுமையின் மடியிலே
    2. பாரத பூமியிலே
    3. எட்டயபுரத்திலே
    4. பிறந்தார்

36. நீங்கள் என்னும் சொல் மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு ஏற்றால் வரும் வடிவம்,
    1. நீங்களால்
    2. எங்களால்
    3. உங்களால்
    4. நீங்களினால்

37. கண் என்னும் பெயர் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்த வாக்கியம்,
    1. கண்ணிற் செவ்வரி படர்ந்தது.
    2. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை
    3. கண்ணின் இமை துடித்தது
    4. கண்ணின் மணி போன்றவர்.

38. அன்பரே! வருக வருக. இதில் எட்டாம் வேற்றுமை ஏற்ற சொல்
    1. வருக
    2. அன்பரே!
    3. அன்பர்
    4. அன்பரே வருக

39. கிழமைப் பொருள் எவ்வேற்றுமைக்குரியது ?
    1. மூன்றாம்
    2. நான்காம்
    3. ஐந்தாம்
    4. ஆறாம்

40. "கரிய மனிதன்" என்பதிற் கரிய என்பது,
    1. குறிப்புவினை பெயரெச்சம்
    2. குறிப்பு வினைமுற்று
    3. ஆறாம் வேற்றுமை உருபேற்றபெயர்
    4. குறிப்பு வினையாலணையும் பெயர்

Agaram Dhines

## பகுதி – II

**(01) பின்வரும் பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. குடும்பஸ்தருக்கு எத்தனை பிள்ளைகள்? மூத்த மருமகனார் எப்படிப்பட்டவர்?
   ...........................................................................................................
   ...........................................................................................................
2. அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவரும் தமது பெயர்களை மாற்றிக் கொண்டதற்குக் காரணம் என்ன?
   ...........................................................................................................
   ...........................................................................................................
3. குறிகாரன் சொன்னபடி குடும்பத்தில் உள்ளோர் பெயர்களை எவ்வாறு மாற்றிக் கொண்டனர்?
   குடும்பத்தருக்கு ..............................................
   அவரது மனைவிக்கு ..............................................
   வீட்டிலுள்ள மாட்டுக்கு ..............................................
   நாய்க்கு ..............................................
   குழந்தைக்கு ..............................................
4. ஊரிலிருந்து வந்த மருமகனை மைத்துனன் எவ்வாறு வரவேற்றான்?
   ...........................................................................................................
   ...........................................................................................................
5. மருமகனை மாமியார் என்ன கூறி வரவேற்றார்?
   ...........................................................................................................
   ...........................................................................................................
6. மருமகன் தப்பியோடுவதற்கான காரணம் யாது?
   ...........................................................................................................
   ...........................................................................................................
   ...........................................................................................................
7. மருமகனின் கோபத்திற்கு காரணம் எதுவென மாமியார் கண்டு பிடித்தார்?
   ...........................................................................................................
   ...........................................................................................................
   ...........................................................................................................
8. உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருள்கள் எவை?
   ...........................................................................................................
   ...........................................................................................................
9. இந்த நாட்டார் கதையில் விஞ்சி நிற்கும் சுவை யாது? இக்கதை எதனை உணர்த்த முயற்சிக்கின்றது?
   ...........................................................................................................
   ...........................................................................................................
   ...........................................................................................................

(02) **மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. அனுபவக் குறைவுடையோரின் முயற்சி முழுப் பயனையும் தருவதில்லை. இதை விளக்கும் பழமொழி.
   1. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
   2. மந்திரம் அறியாதவன் பூசை விடிய விடிய
   3. சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது.

Agaram Dhines

4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

2. “பங்குனி என்று பருப்பதுமில்லை, சித்திரையென்று சிறுப்பதுமில்லை” என்னும் பழமொழியின் பொருள்
   1. பங்குனி நல்ல மாதம், சித்திரை சிறப்பற்ற மாதம்.
   2. எந்த நிலையிலும் விருப்புவெறுப்பற்ற சுபாவம்.
   3. இன்பத்தில் இன்பமும் துன்பத்தில் துன்பமும் அனுபவித்தல்
   4. வருடத்தில் எல்லா மாதங்களும் சமமானவையே.

3. “வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது” என்னும் பழமொழியின் பொருள்,
   1. நன்மை செய்தவருக்குத் தீமை செய்தல்.
   2. வளர்த்த மறி மார்பிற் பாயாது.
   3. கடாவுக்குச் செல்லம் கொடுக்கக் கூடாது.
   4. கடாவை ஒழுங்காக வளர்க்க வேண்டும்.

4. துன்பங்களை அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள் மேலும் வரும் துன்பத்தால் வருந்துவதில்லை என்னும் பொருளை விளக்கும் பழமொழி,
   1. பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்.
   2. முட்டையிட்ட கோழிக்குத்தான் வருத்தம் தெரியும்.
   3. அறநனைந்தவனுக்குக் கூதலென்ன குளிரென்ன.
   4. பட்ட காலிலேயே படும் கெட்டகுடியே கெடும்.

6. “பொரிமாவை மெச்சினானாம் பொக்கைவாயன்” என்னும் பழமாழியின் கருத்து,
   1. பொரிமாவே பொக்கைவாயன் விரும்பும் உணவு.
   2. பல்லிலாதவர் நல்ல உணவைச் சுவைக்க முடியாது.
   3. கிழவர்கள் எதனையும் நன்றாக இரசிக்கமாட்டார்கள்.
   4. தத்தம் தகுதிக்கேற்றவாறே எவரும் அனுபவிப்பர்.

**(3). பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சாரணர் இயக்கத்தால் மாணவர் அடையும் பயன்கள்.

2. கொட்டும் மழையில் நான் நனைந்தபோது கண்டகாட்சிகளும் பெற்ற அனுபவங்களும்.

3. உமது பாடசாலையில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் நீர் நிகழ்த்திய வரவேற்புரை.

4. தமிழ்மொழியில் உள்ள இஸ்லாமிய இலக்கியங்கள்.

5. பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்களின் பணிகள்.

(04). **பின்வரும் வாக்கியங்களை முறைப்பட ஒழுங்குபடுத்தினால் இவை கருத்துத் தொடர்புள்ள ஒரு பந்தியாகும். சரியான ஒழுங்கைத் தெரிவு செய்க.**

அ) கூடுமானவரை இலக்கணப்பிழையோ எழுத்துப்பிழையோ இல்லாமல் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆ) ஆனால் சேர்ந்தாற்போல நான்கு வாக்கியங்களைத் தவறின்றி எழுதத் தெரியாதவர்கள் நிறையக் கதை எழுத விரும்பித் தங்கள் நேரத்தை வீணாக்குகிறார்கள்.

இ) தமிழைச் சரியாக எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தமிழில் எழுதத் தொடங்குவது வீண் ஆசை.

ஈ) எதை எழுதவேண்டுமானாலும் ஆரம்பத்தில் அடிப்படைக்கல்வி அவசியம்.

உ) இப்படிச் சொல்வதால் எழுத விரும்புகிறவர்கள் எல்லாம் தமிழ்ப் பண்டிதர்களாகவே மாறவேண்டுமென்பதில்லை.

1. இ, உ,ஆ, அ, ஈ
2. ஈ, இ, அ, உ, ஆ
3. ஈ, உ, அ, இ, ஆ
4. உ, இ, ஈ, ஆ, அ

**(05) பின்வரும் செய்யுளை நன்கு வாசித்தபின், அதன் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**“களி மயில் அகவும் புள்ளிக் கருங்குயில் பாட்டிசைக்கும்.**
**விளித்திடும் துணைபிரிந்த புள்ளினம் விளாமரத்தில்**
**ஒளித்துண்ணும் அணிலோ, கிள்ளை ஒளி மூக்கை மிளகாயென்று**
**களித் துண்ணப் பாயும், காட்டில் காண் எழில் ஓவியத்தை”**

1. இப்பாடல் எக்காட்சியைச் சித்திரிக்கிறது?
   ……………………………………………………………………………………………
2. களிமயில் என்ன செய்கிறது?
   ……………………………………………………………………………………………
3. பாட்டிசைப்பது யார்?
   ……………………………………………………………………………………………..
4. புள்ளினம் என்ன செய்கிறதாம்?
   ……………………………………………………………………………………………
5. கிளியின் மூக்கை மிளகாயென்று பறித்துண்ண முயல்வது எது?
   ……………………………………………………………………………………………
6. இப்பாடலின் பொருளை உமது வசன நடையில் எழுதுக.
   ……………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………

**செயற்பாடு :**

**பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. ஒலி ……………………………………………………………………………………………
2. ஒளி ……………………………………………………………………………………………
3. ஒழி ……………………………………………………………………………………………
4. கழி ……………………………………………………………………………………………
5. களி ……………………………………………………………………………………………

Agaram Dhines

6. விளி ……………………………………………………………………………………

7. விழி ……………………………………………………………………………………..

8. விளா ……………………………………………………………………………………

9. விழா ……………………………………………………………………………………

10. விலா ……………………………………………………………………………………

Agaram Dhines